
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 57 | 4 Pages | 26.9.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 57 | 4 பக்கங்கள் | 26.9.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து**
**வாழ்வாரின் வன்கணா ரில்**

**விளக்கம்:**
மனத்தில் பற்றுக்களைத் துறக்காமல் துறந்தவரைப் போல் வஞ்சனைச் செய்து வாழ்கின்றவரைப் போல் இரக்கமற்றவர் எவரும் இல்லை.

## பூமியை நோக்கி வரும் விண்கல்லை திசை திருப்பும் அணுக்கதிர்வீச்சு விஞ்ஞானிகள் பரிசோதனை வெற்றி



இஸ்ரேல், செப். 26


விண்வெளியில் இருந்து பூமியை நோக்கி நூற்றுக்கணக்கான விண்கற்கள் தினமும் கடந்து செல்கின்றன. சில விண்கற்கள் பூமியில் விழும் சம்பவங்களும் அவ்வப்போது நடந்துள்ளது. அதே நேரம் இதில் மிகப்பெரிய விண்கற்கள் மட்டுமே பேசுபொருளாக இருக்கும்.

கடந்த 2013 ஆம் ஆண்டு ரஷியாவின் தலைநகரான மாஸ்கோவிலிருந்து, 1,400 கி.மீ., தொலைவில், கஜகஸ்தான் எல்லைக்கு அருகில் செல்யாபின்ஸ்க் என்ற பகுதியில் விண்ணில் இருந்து பறந்து வந்த விண்கற்கள் விழுந்தன. இந்த கற்கள் விழுந்த சத்தம், வெடி சத்தத்தை போன்று கேட்டது. இதனால், மக்கள் பீதியடைந்தனர். இச்சம்பவத்தில் சுமார் 1200க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இதேபோன்றுஅபாயம்மீண்டும்வந்தால்அதனைஎப்படிஎதிர்கொள்வது என சர்வதேச அளவில் விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தவகையில்பூமியைநோக்கிவரும்விண்கற்கள்மீதுஅணுக்கதிர்வீச்சை பாய்ச்சி அதனை திசை திருப்ப முடியும் என்பதை அமெரிக்காவின் நியூ மெக்சிகோவில் உள்ள சாண்டியா தேசிய ஆய்வகத்தில் விஞ்ஞானிகள் நடத்திய பரிசோதனை நிரூபித்துள்ளது,

## விரைவில் அமைதி திரும்பும்.. போர் முடிவுக்கு வர உள்ளது அமெரிக்காவில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி



அமெரிக்கா, செப். 26

குவாட் அமைப்பின் உச்சி மாநாட்டில் பங்கேற்க பல்வேறு உலக நாடுகளின் தலைவர்களும் அமெரிக்கா நோக்கிப் படையெடுத்த னர். இந்தியா சார்பில் பிரதமர் மோடிஅமெரிக்கசென்றுநாடுதிரும்பியுள்ளார். அந்த வகையில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியும் அமெரிக்கா வந்திருந்தார். பிரதமர் மோடியையும் ஜெலன்ஸ்கி சந்தித்தார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு தொடங்கிய உக்ரைன் ரஷியா போர் தொடர்ந்து வரும் நிலையில் மேற்கத்திய நாடுகள் உதவியுடன் ரஷியாவை சமாளித்து வருகிறது. மேலும் ரஷிய பகுதிகளில் நுழைந்தும் உக்ரைன் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் போர் முடிவுக்கு வரும் தறுவாயில் உள்ளதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் வாஷிங்க்டன் மாகாணத்தில் வைத்து ஏபிசி செய்தி நிறுவனத்திற்குப் பேட்டியளித்த ஜெலன்ஸ்கி, ரஷியா உடனான போரில் அமைதிக்கு மிக அருகில் நெருங்கியுள்ளதாக நாங்கள் கருதுகிறோம். எனவே போரை முடிவுக்குக் கொண்டுவரும் தருவாயில் உள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

மேற்கு நாடுகள் அங்கம் வகிக்கும் நேட்டோ கூட்டமைப்பில் உக்ரைன் இணைய முயன்றதால் தங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று கருதிய ரஷியா கடந்த 2022 பிப்ரவரி மாதம் உக்ரைன் மீது தாக்குதல் நடத்த தொடங்கியது. இந்த போரில் உக்ரைனுக்கு ஐரோப்பிய யூனியன் நாடுகளும், அமெரிக்காவும் ராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கி வருகிறது. சீனா, வட கொரியா உள்ளிட்ட நாடுகள் ரஷியாவுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறது.

## இலங்கையின் 3 ஆவது பெண் பிரதமராக ஹரிணி அமரசூரிய பதவியேற்பு



இலங்கை, செப். 26

இலங்கையில் நடந்த அதிபர் தேர்தலில் தேசிய மக்கள் கட்சி தலைவர் அனுர குமார திசநாயக வெற்றி பெற்றார். அவர் நேற்று அதிபராக பதவி ஏற்றுக் கொண்டார்.

இதற்கிடையே பிரதமராக இருந்த தினேஷ் குணவர்தனே தனது பதவியை ராஜினாமா செய்தார். இதனையடுத்து அவரது தலைமையிலான அமைச்சரவையும் பதவி விலகியது.

இந்நிலையில், இலங்கையின் புதிய பிரதமராக தேசிய மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய பதவியேற்று கொண்டார். இவர் இலங்கை வரலாற்றில் மூன்றாவது பெண் பிரதமர் ஆவார்.

கொழும்பில் உள்ள அதிபர் அலுவலகத்தில் அதிபர் அனுர குமார திசநாயக முன்னிலையில் அவர் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

# புதிதாக கட்டப்பட்டுள்ள துவக்கப்பள்ளியை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, செப். 26

சென்னை கொளத்தூரில் ஜிகேஎம் காலனியில் நடைபெற்று வரும் சமுதாய நலக்கூட கட்டுமான பணியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார். கட்டுமான பணியின் நிலை குறித்து பொறியாளரிடம் அவர் கேட்டறிந்தார்.



கொளத்தூர் ஜிகேஎம் காலனியில் புதிதாக கட்டப்பட்டுள்ள தொடக்கப்பள்ளியை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

கொளத்தூர் பகுதியில் புதிதாக கட்டப்படும் வட்டாட்சியர், சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார். இதையடுத்து மதுரை சாமி மடத்தில் புனரமைப்பு செய்யப்பட்ட உடற்பயிற்சி கூடத்தையும் அவர் திறந்து வைத்தார்.

பேப்பர் மில்ஸ் சாலையில் வருவாய்துறையின் இடத்தில் புதிதாக அமையும் வட்டாட்சியர் அலுவலகத்தை முதலமைச்சர் பார்வையிட்டார்.

# உடல் உறுப்பு தானம் செய்ய முதலமைச்சர் பதிவு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்





சென்னை, செப். 26

சென்னை, கலைவாணர் அரங்கத்தில் உறுப்பு தான தின நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு ஆகியோர் பங்கேற்று, உடல் உறுப்பு மாற்று விழிப்புணர்வு கையேடு மற்றும் "மறுபிறவி" என்ற உடல் உறுப்பு தான விழிப்புணர்வு குறுந்தகட்டினை வெளியிட்டனர்.

இந்த நிகழ்ச்சியில், உறுப்பு கொடையாளர் குடும்பத்தினருக்கு சிறப்பு செய்து, உறுப்பு மாற்று சிகிச்சையில் சிறப்பாக பணியாற்றிய டாக்டர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிருபர்களிடம் கூறியதாவது:

உறுப்பு மாற்று சிகிச்சை திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து தற்போது வரை 1998 உறுப்புக் கொடையாளர்கள் உருவாகி இருக்கிறார்கள். இருதய மாற்று அறுவை சிகிச்சைக்கு கொடையாளர்களின் மூலம் பெறப்பட்ட இதயம் 892, நுரையீரல் 912, கல்லீரல் 1,794, சிறுநீரகம் 3,544, கணையம் 42, சிறுகுடல் 15, வயிறு 1, கைகள் 7 என 7,207 முக்கிய உறுப்புகள் பயன்பாடு பெற்றிருக்கிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு 2021 முதல் தற்போது வரை 585 பேர் உடலுறுப்பு தானம் செய்திருக்கிறார்கள்.

சென்னையில் உள்ள மியாட் ஆஸ்பத்திரியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உடல் உறுப்பு தானம் செய்ய பதிவு செய்து உள்ளார்.

உடலுறுப்பு கொடையாளர்களின் எண்ணிக்கை பெருகிவரும் சூழ்நிலையில் தொடர்ச்சியாக கடந்த 8 ஆண்டுகளாக தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் பெற்று வருகிறது. சிறுநீரகம் வேண்டி காத்திருப்பவர் 7,106 பேர், கல்லீரல் வேண்டி காத்திருப்பவர் எண்ணிக்கை 416 பேர், இதயத்திற்காக 83 பேர், நுரையீரல் வேண்டி காத்திருப்பவர் 54 பேர், இதயம் மற்றும் நுரையீரல் வேண்டி காத்திருப்பவர் 24 பேர், கணையம், கைகள், சிறுகுடல், வயிறு, சிறுநீரகம், இதயம் என 7,797 பேர் உடலுறுப்பு வேண்டி காத்திருப்பவர்களாக உள்ளனர்.

இவர்களுக்கு விடியல் என்னும் இணையதளம் தொடங்கி அதன்மூலம் ஒவ்வொருவருக்கும் அவர்கள் பதிவு செய்திருக்கும் காலத்தினை பொறுத்து, உடலுறுப்புகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பாம்புக்கடி மருந்துகளும், நாய்க்கடி மருந்துகளும் கையிருப்பில் உள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் கையிருப்பு இருந்ததா? என்பதை எடப்பாடி பழனிசாமி தெரிந்து கொண்டு பேச வேண்டும். டெங்கு என்பது பெரிய அளவில் கட்டுக்குள் உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்வில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குனர் ராஜமூர்த்தி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குனர் சங்குமணி, தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் கோபாலகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# விழுப்புரம் மாவட்டம் காவல்துறை சார்பில் மாணவிகளுக்கு சைபர் கிரைம், பெண்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி

விழுப்புரம், செப். 26

தமிழ்நாடு சைபர் கிரைம் காவல் துறை கூடுதல் இயக்குனர் சந்தீப் மிட்டல்,இ.கா.ப மற்றும் விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக் சிவாச் IPS வழிகாட்டுதலின் படியும் விழுப்புரம் மாவட்ட காவல் துறையினர், விழுப்புரம் M.G.R அரசு மகளிர் கலை கல்லூரி மாணவிகளுக்கு சைபர் கிரைம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. தினகரன் மேற்பார்வையில்

சைபர் கிரைம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் ஸ்ரீபிரியா, குழைந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்ற பிரிவு காவல் ஆய்வாளர்கள் சேகர், கீதா, உதவி ஆய்வாளர் கலைச்செல்வி மற்றும் காவலர்கள் இணைந்து குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்தும், போதை பொருட்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், பெருகி வரும் இணைய வழி குற்றங்கள் குறித்தும், அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், அவற்றிலிருந்து கவனமுடன் இருக்க போதுமான வழிமுறைகள் குறித்தும், குறிப்பாக ஆன்லைன் விளையாட்டுக்கள், சமூக வலைதளங்களில் நடைபெறும் குற்றங்கள், போலியான Appகளில் பெரும் கடன்கள் குறித்து சைபர் கிரைம் போலீசார் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



இந்த நிகழ்ச்சியில் 1930 உதவி எண், cybercrime.gov.in குறித்து விளக்கமளித்து துண்டு பிரசுரங்கள் வழங்கியும் அவர்களுக்கு மேற்கண்ட குற்றங்கள் சம்பந்தமான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

# செஞ்சி பள்ளியில் என்.எஸ்.எஸ். தினம்



செஞ்சி, செப். 26

செஞ்சி பள்ளியில் என் எஸ் எஸ் தினம் கொண்டாடப்பட்டது

செஞ்சி இராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் செப்டம்பர் என்எஸ்எஸ் தினம் கொண்டாடப்பட்டது பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் ராமசாமி வரவேற்றார்.

பள்ளியின் தலைமை ஆசிரியர் சத்தியமூர்த்தி தலைமை தாங்கினார் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் திரு மாணிக்கம் அவர்கள் சிறப்புரையாற்றி வாழ்த்தி மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கினார் ஏழுமலை நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் நன்றி உரை கூறினார்



விழுப்புரம் மாவட்டம் அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் முன்னாள் தலைவர் விக்கிரவாண்டி தாலுக்கா நுகர்வோர் கண்காணிப்பு குழு உறுப்பினர் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு உறுப்பினர் ஜேசு ஜூலியஸ் ராஜா தலைமையில் இலவச கண் அறுவை சிகிச்சைக்கு முகாம் நடைபெற்றது.இந்த முகாமில் 80 க்கு மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர். இதில் 35 நபர்கள் பாண்டிச்சேரி பிம்ஸ் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். உடன் பிம்ஸ் ஒருங்கிணைப்பாளர் ஜான்சன்.

# உளுந்தூர்பேட்டை அருகே விபத்தில் 6 உயிரிழப்பு

உளுந்தூர்பேட்டை, செப். 26

மாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சுற்றுலா வேனில் திருச்செந்தூர் முருகன் கோவில் சென்றனர்.

பின்னர் கோவிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு சுற்றுலா வேனில் ஊருக்கு திரும்பினார்கள். அப்போது உளுந்தூர்பேட்டை அருகே உள்ள மேட்டத்தூரில் சுற்றுலா வேன் மரத்தில் மோதி விபத்துக்குள்ளானது.




அதில் பயணம் செய்த 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழிந்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த 13 பேர் மீட்கப்பட்டு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்தில் 6 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டில் உள்ளது: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை, செப். 26

சென்னைசின்னபோரூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட 9 அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அத்துடன் கடந்த ஆண்டு மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட அரசுப் பள்ளிகளில் முதல் 3 இடங்களைப் பிடித்த மாணவ மாணவியருக்கு ரூ.10 ஆயிரம், ரூ.5 ஆயிரம் மற்றும் ரூ.2 ஆயிரம் என்ற வரிசையில் நிதி மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன.



அதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:

தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த ஆண்டில் டெங்கு காய்ச்சலுக்கு இது வரை 5 பேர் உயிரிழந்துள்ளனர். தமிழ்நாட்டில் எந்த விதமான வைரஸ் காய்ச்சல்களும் இல்லை, நிபா வைரஸ் பரவலும் கிடையாது. கேரளா தமிழ்நாடு மாநில எல்லைகளில் பொது சுகாதாரத்துறை தீவிர சோதனை நடத்தி வருகிறது.

பன்னாட்டு விமான நிலையங்களில் குரங்கம்மை குறித்த முழு உடல் வெப்பபரிசோதனை முழு வீச்சில் உள்ளது. குரங்கம்மை நோய்க்கென தமிழகத்தில் சிறப்பு வார்டுகள் தயார் நிலையில் உள்ளன. மழைக்காலம் வருவதால் எங்கும் தண்ணீர் தேங்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார்.

# கோவையில் ஆதியோகி திவ்ய தரிசனம் ரத்து

கோவை, செப். 26

கோவை வெள்ளியங்கிரி மலையடிவாரத்தில் அமைந்துள்ள ஈஷா யோக மையத்திற்கு உலகம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் வருகை தருகின்றனர். குறிப்பாக அவர்கள் இரவு 7.20 மணிக்கு தொடங்கும் ஆதியோகி திவ்ய தரிசனத்தை கண்டு ரசிப்பதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர். 15 நிமிடங்கள் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆதியோகி சிவன் சப்தரிஷிகளுக்கு யோக விஞ்ஞானத்தை பரிமாறிய வரலாறு சத்குருவின் கம்பீர குரலில் ஒளி, ஒலி காட்சியாக விவரிக்கப்படும்.



மக்களை கவர்ந்த இந்நிகழ்வு 28ம் தேதி வரை தற்காலிகமாக நடைபெறாது. பராமரிப்பு பணிகள் நிறைவு பெற்ற பிறகு 29ம் தேதி முதல் வழக்கம் போல் மக்கள் இந்நிகழ்வை கண்டு ரசிக்கலாம்.

ஆதியோகி, தியானலிங்கம், லிங்கபைரவி வளாகங்கள் எவ்வித மாற்றமும் இன்றி வழக்கம் போல் பக்தர்களின் தரிசனத்திற்காக திறந்து இருக்கும் என ஈஷா யோக மையம் தெரிவித்துள்ளது.

# தேசிய அளவில் கோ கோ போட்டி கோவூர் ஸ்ரீ கிரிஷ் இண்டெர்நேஷனல் பள்ளி முதலிடம்

சென்னை, செப். 26

வண்டலூர், ரத்தினமங்கலத்தில் உள்ள ஸ்ரீ கிரீஷ் இண்டர்நேஷனல் பள்ளியில் சிபிஎஸ்சி க்ளஸ்டர் பள்ளிகளுக்கு இடையேயான தேசிய அளவில் கோ கோ போட்டி நடைபெற்றது. இதில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி, அந்தமான், ஆந்திரா என பல்வேறு மாநிலங்களில் இருந்து 800 பள்ளிகளை சார்ந்த 10000 மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.






14,17,19 வயது என மூன்று பிரிவின் கீழ் 4 நாட்கள் நடைபெற்ற இந்த போட்டியில் 19 வயது பிரிவில் என்.கே.வி.வித்யாலயா பள்ளியும் ,17 வயது பிரிவில் ஸ்ரீ கிரிஷ் இண்டெர்நேஷனல் பள்ளியும், 14 வயது பிரிவில் வேலம்மாள் வித்யாலயாவும் முதலிடம் பிடித்தது.

வெற்றி பெற்ற அணிகளுக்கு தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சுந்தர் மற்றும் பள்ளித் தலைவர் ஆர். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பரிசு கோப்பையை வழங்கினர்.இதில் பள்ளி தாளாளர் கவுரி கிருஷ்ணமூர்த்தி, செயல் அலுவலர் ஜெயகார்த்திக் என பலர் கலந்து கொண்டனர்.

# அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் மீது சொத்து குவிப்பு வழக்குப்பதிவு



சென்னை, செப். 26

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரும், ஓ.பி.எஸ். ஆதரவாளருமான வைத்திலிங்கம் அ.தி.மு.க. ஆட்சியின்போது நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சராக இருந்தபோது குடியிருப்பு கட்டுமான அனுமதிக்கு ரூ.27 கோடி லஞ்சம் பெற்றதாக லஞ்ச ஒழிப்பு போலீசார் கடந்த சில நாட்களுக்கு முன்பு வழக்குப்பதிவு செய்திருந்தனர்.

இந்த நிலையில் வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்ததாக வைத்திலிங்கம் மீது புதிய வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள வருமானத்துக்கு அதிகமாக 1058 சதவீதம் அளவுக்கு சொத்துக்களை வாங்கி குவித்திருப்பதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# துணை முதல்வர் பதவி... ஆதவ் அர்ஜூன் கருத்தை ஏற்க முடியாது வன்னியரசு




சென்னை, செப். 26

சினிமாவில் இருந்து வந்தோருக்கு துணை முதல்வர் பதவி வரும் போது திருமாவுக்கு கூடாதா? என்று துணை முதல்வர் பதவி குறித்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஆதவ் அர்ஜூன் கூறி இருந்தார்.

இதுதொடர்பாக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொதுச்செயலாளர் வன்னியரசுகூறியதாவது:

★ துணை முதல்வர் பதவி குறித்து ஆதவ் அர்ஜூன் கூறிய கருத்தில் ஏற்பில்லை.

★ ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்பது விசிகவின் அடிப்படை கொள்கை. அதில் எந்த மாற்றம் இல்லை.

★ ஆதவ் அர்ஜூன் கருத்து அவருடைய தனிப்பட்ட கருத்துதான். கட்சியின் கருத்தல்ல.

★ திமுகவுடன் கூட்டணி சுமூகமாக உள்ளது. 2026 சட்டசபை தேர்தலிலும் கூட்டணி தொடரும் என்று கூறினார்.

# மகனை பயிற்சிக்கு அனுப்பியவருக்கு நேர்ந்த கொடுமை: ஆபாச படம் எடுத்து பணம் பறித்த குத்துசண்டை பயிற்சியாளர்கள்

மதுரை, செப். 26

மதுரை அண்ணாநகரை சேர்ந்த 39 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் தன்னை ஆபாசமாக புகைப்படம் எடுத்து பல லட்சம் மோசடி செய்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என விளக்குத்தூண் போலீஸ் உதவி கமிஷனர் அலுவலகத்தில் புகார் அளித்தார். மேலும் அவர் அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

மதுரை அண்ணாநகரைச் சேர்ந்த எனது கணவர் லட்சுமணன். எங்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். மூத்த மகன் தனியார் கல்லூரியில் இரண்டாம் ஆண்டும், இளைய மகன் தெப்பக்குளம் பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் பத்தாம் வகுப்பும் படித்து வருகின்றனர்.

கடந்த 10 வருடங்களுக்கு முன்பாக கணவரை பிரிந்து தனியாக தையல் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். இளைய மகனுக்கு குத்துச்சண்டை பயிற்சி கற்றுக் கொள்வதில் ஆர்வம் இருந்துள்ளது. மகனின் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் இலவசமாக குத்துச்சண்டை பழகுவதற்காகமகனைஅனுப்பி வைத்தேன்.

அங்கே பயிற்றுநர்களாக இருந்த அனுப்பானடி வடக்கு தெருவை சேர்ந்த தேவராஜ், மேலூர் பகுதியைச் சேர்ந்த ராஜ்குமார் ஆகியோர் மகனுக்கு பாக்சிங் சொல்லிக் கொடுத்தனர். மேலும் பல்வேறு போட்டிகளுக்கும் அழைத்து சென்றுள்ள நம்பிக்கையில் பயிற்சி முடித்து எனது மகனை வீட்டில் இறக்கி விட்டு செல்வதை வழக்கமாக கொண்டிருந்தனர்.

இதனால் நன்கு அறிமுகமான அவர்களிடம் எனது செல்போன் எண்ணை பகிர்ந்தேன். மகன் தற்போது 10ம்வகுப்புபடித்து வருவதால் பொதுத் தேர்வை மனதில் வைத்து அவனை குத்துச்சண்டை பயிற்சிக்கு அனுப்பாமல் இருந்தேன். சம்பவத்தன்று பயிற்றுநர்கள் தேவராஜ், ராஜ்குமார் ஆகியோர் எனது செல்போன் எண்ணிற்கு போன் செய்து கேட்டதற்கு, அண்ணாநகரில் உள்ள எனது தோழி வீட்டில் இருப்பதாக கூறினேன்.அதனைதொடர்ந்து அங்கு வந்த பயிற்றுநர்கள் குடிப்பதற்கு தண்ணீர் தருமாறு கேட்டனர்.

நானும் வீட்டிற்குள் சென்று தண்ணீர் எடுத்து வந்தபோது, சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் கத்தியை காட்டி சேலையை அவிழ்க்குமாறு மிரட்டினர். தாமதிப்பதற்குள் என்னை செல்போனில் ஆபாசமாக படம் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டனர்.

அந்த ஆபாச புகைப்படங்களை சமூக வலைதளங்கள் மற்றும் எனது உறவினர்களுக்கு அனுப்பி விடுவதாக கூறி மிரட்டியதால் பல்வேறு தவணைகளில் சுமார் ரூ.4 லட்சம் வரை பணத்தை அவர்களுக்கு கொடுத்துள்ளேன். தொடர்ந்து அவர்கள் பணம் கேட்டு தொந்தரவு செய்யவே அவர்களுடைய செல்போன் எண்ணை பிளாக் செய்து விட்டேன். மற்றொரு வாட்ஸ்அப் நம்பரில் இருந்து எனது எண்ணிற்கு ஆபாச புகைப்படங்களை அனுப்பினர். நான் அதை பாதுகாப்பதற்குள் அதை அழித்து விட்டனர்.

மேலும் அவர்கள் தங்களுக்கு தேவைப்படும் நேரத்தில் எல்லாம் பணம் கொடுக்க வேண்டும் எனவும் மிரட்டினர்.

ஒரு கட்டத்தில் தன்னிடம் கொடுப்பதற்கு எதுவும் இல்லை என கூறிய நிலையில், நேற்று முன்தினம் இரவு என்னை செல்போனில் அழைத்த அவர்கள் எனது அந்தரங்க புகைப்படம் மற்றும் வீடியோவை என்னிடம் கொடுத்து விடுவதாக ஆசைவார்த்தை கூறி தெப்பக்குளம் பகுதியில் உள்ள ஒரு கல்லூரிக்கு பின்புறம் வருமாறுகூறினர்.அதனை நம்பி நான் அங்கு சென்ற போது நான் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை கழட்டித் தரச் சொல்லி மிரட்டி அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

மேலும் இதை யாரிடமாவது வெளியில் சொன்னால் உன்னை கொலை செய்து விடுவோம் என்றும், போலீசில் புகார் அளித்தால் என்னோடு பல ஆண்களுக்கு தொடர்பு இருப்பதாகவும் சொல்வோம் என்று மிரட்டல் விடுத்துள்ளனர்.

மேலும்தான் கொடுத்த 4 லட்சம் பணத்தை திருப்பி வாங்கித்தர வேண்டும். என்னை ஆபாசபடம் எடுத்து பணம் பறித்த பயிற்சியாளர்கள் ராஜ்குமார், தேவராஜ் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

# வால்பாறையில் தண்ணீரில் நீந்தி மகிழ்ந்த காட்டு யானை

வால்பாறை, செப். 26

கோவை மாவட்டம் வால்பாறையில் எண்ணற்ற தேயிலை தோட்டங்களும், இயற்கை காடுகளும் நிறைந்து காணப்படுகிறது.

இங்கு நிலவும் சீதோஷ்ண நிலை மற்றும் தேயிலை தோட்டங்கள், இயற்கை காட்சிகளை கண்டு ரசிப்பதற்கு என்று நாள்தோறும் சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்த வண்ணம் உள்ளனர்.

சுற்றுலா பயணிகளின் சிறந்த பொழுதுபோக்கு இடமாகவும் வால்பாறை இருந்து வருகிறது. அவர்கள் தேயிலை தோட்டங்களை கண்டு ரசித்து, கூழாங்கல் ஆற்றில் இறங்கி குளித்து மகிழ்ந்து செல்கின்றனர்.

வால்பாறையில் உள்ள வனப்பகுதிகளில், காட்டு யானைகள் உள்ளிட்ட பல்வேறு வனவிலங்குகள் உள்ளன. இவை அவ்வப்போது வனத்தை விட்டு வெளியேறி அருகே உள்ள தேயிலை தோட்டங்களுக்குள் புகுந்து, அங்குள்ள தண்ணீர் தேங்கும் பகுதியில் தண்ணீர் குடிப்பதுடன், குளித்து நீந்தி மகிழ்ந்தும் வருகிறது.



சம்பவத்தன்று 8 காட்டு யானைகள் கூட்டம் குட்டியுடன் வனத்தை விட்டு வெளியேறி, தாய்முடி எஸ்டேட் பகுதிக்கு வந்தன. அங்குள்ள தேயிலை தோட்டங்களில் யானைகள் கூட்டம் சிறிது நேரம் சுற்றி திரிந்தது. பின்னர் யானைகள் தேயிலை தோட்டங்களையொட்டி உள்ள தண்ணீர் தேக்கும் பகுதி வழியாக காட்டு யானைகள்கூட்டம்நடந்து சென்றன. அங்கு தண்ணீரை பார்த்ததும் யானைகள் கூட்டத்தில் இருந்த யானை ஒன்று மகிழ்ச்சியில் துள்ளிகுதித்தது.

தண்ணீரை கண்ட யானை துள்ளிகுதித்த படி தண்ணீருக்குள் இறங்கி, தண்ணீரை பருகியது. மேலும் தண்ணீருக்குள் படுத்து ஆனந்த குளியல் போட்டு, நீந்தி மகிழ்ந்தது. அத்துடன் துதிக்கையால் தண்ணீரை ஊறிஞ்சி அதனை தனது உடல் முழுவதும் பீய்ச்சி கொண்டு மகிழ்ச்சியடைந்தது.

சில மணி நேரம் தண்ணீரில் ஆனந்த குளியல் போட்ட யானை, அதன்பிறகு யானை கூட்டத்துடன் சேர்ந்து, வனத்தை நோக்கி சென்றது.

அங்கு தேயிலை பறிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள், சுற்றுலாப் பயணிகள் சிலர் வெகுதூரத்தில் இருந்து இந்த காட்சியை கண்டு ரசித்தனர். அதனை தங்கள் செல்போனில் வீடியோ, புகைப்படமும் எடுத்து கொண்டனர். இந்த வீடியோ காட்சிகளை சமூக வலைத்தளங்களில் பகிரவே தற்போது அந்த காட்சிகள் வைரலாகி வருகின்றன.

# துணை முதல்வராக திமுகவில் வேறு எவருக்கும் தகுதி இல்லையா? ஜெயக்குமார்



சென்னை, செப். 26

அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படும் போது அரசு வேடிக்கை பார்க்கிறது. மீனவர்களின் வாழ்வாதாரமான படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

★ தமிழக மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர். திமுக அரசுக்கு அதுபற்றி கவலையில்லை.

★ திமுக சங்கரமடம் இல்லை என்று முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி கூறினார்.

★ திமுகவில் கடுமையாக உழைத்தவர்களுக்கு துணை முதலமைச்சர் பதவி இல்லையா?

★ மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக உதயநிதி துணை முதல்வர் என கொஞ்சம் கொஞ்சமாக கருத்தை விதைத்தனர்.

★ திமுகவில் சீனியர்கள் பலர் இருக்கும்போது உதயநிதிக்கு துணை முதல்வர் பதவி கொடுக்க முயற்சி நடப்பது ஏன்?

★ துணை முதல்வராக உதயநிதியை தவிர திமுகவில் வேறு எவருக்கும் தகுதி இல்லையா? என்று அவர் கூறினார்.

# திரைப்பட இயக்குனர் மோகனை அரைகுறை புரிதலுடன் கைது செய்வதா? ராமதாஸ் கண்டனம்

சென்னை, செப். 26

பாமக நிறுவனர் ராமதாஸ் தனது எக்ஸ் தள பதிவில்,

தமிழ்நாட்டில் உள்ள புகழ்பெற்ற கோயில் ஒன்றின் பஞ்சாமிர்தம் குறித்து யூடியூப் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு நேர்காணல் அளித்ததற்காக திரைப்பட இயக்குனர் ஜி.மோகன் கைது செய்யப்பட்டிருக்கிறார். அரைகுறை புரிதலுடன் திருச்சி மாவட்ட காவல்துறையினர் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது.





இயக்குனர் மோகன் அளித்த நேர்காணலை பார்த்தவர்களுக்கு அவர் எந்த தவறும் செய்யவில்லை என்பது தெளிவாகத் தெரியும். யூடியூப் தொலைக்காட்சி அலைவரிசைக்கு அளித்த நேர்காணலில், "புகழ்பெற்ற கோயில் ஒன்று தயாரிக்கப்பட்ட பஞ்சாமிர்தத்தில் ஆண்மைக்குறைவு மாத்திரைகள் கலக்கப்பட்டதாகவும், பின்னர் அந்த பஞ்சாமிர்தம் தரமற்றது என்று கூறி அழிக்கப்பட்டதாகவும் செவிவழிச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கு என்னிடம் எந்த ஆதாரமும் இல்லை. அதனால் தான் நான் இதை செய்தியாளர் சந்திப்பைக் கூட்டி தெரிவிக்கவில்லை. காழ்ப்புணர்ச்சி காரணமாக அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகக் கூட இவ்வாறு கூறப்பட்டிருக்கலாம். அரசும், அதிகாரிகளும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்று தான் கூறியிருக்கிறார்.

இயக்குனர் மோகன் கூறியதில் எந்த தவறும் இல்லை. பொது நலன் கருதி கூறியதை முழுமையாக புரிந்து கொள்ளாமல், அங்கொன்றும், இங்கொன்றுமாக வார்த்தைகளை புரிந்துகொண்டு மோகனை கைது செய்திருப்பது அநீதி. அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# ஆந்திரா-ஒடிசா இடையே புதிய புயல் சின்னம்: தமிழகத்தில் 29ந்தேதி வரை மழைக்கு வாய்ப்பு



சென்னை, செப். 26

ஆந்திரா மற்றும் ஒடிசா இடையே வங்கக்கடலில் புதிய புயல் சின்னம் உருவாகி உள்ளது. இதனால் ஆந்திரா, தெலுங்கானா, ஒடிசா ஆகிய மாநிலங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. தமிழகத்தில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

வட ஆந்திரா மற்றும் தெற்கு ஒடிசாவுக்கு இடையேயுள்ள வங்கக்கடலில் நேற்று நள்ளிரவு காற்றழுத்த தாழ்வு பகுதி (புயல் சின்னம்) உருவாகி உள்ளது. இது மத்திய ஆந்திராவில் கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக ஆந்திரா, தெலுங்கானா, மற்றும் ஒடிசாவில் ஒருசில இடங்களில் இனிவரும் நாட்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

வட தமிழகம் மற்றும் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று முதல் வருகிற 29ந்தேதி வரை இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேலும் ஓரிரு இடங்களில்தரைக்காற்று மணிக்கு 40 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இன்று முதல் வருகிற 27 ந்தேதி வரை மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோர பகுதிகள் மற்றும் அதனையொட்டிய குமரிக் கடலில் மணிக்கு 55 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும். எனவே மீனவர்கள் இப்பகுதிகளுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மகாவிஷ்ணு விவகாரம்: தலைமை ஆசிரியர்கள் மீண்டும் சென்னைக்கு பணியிட மாற்றம்



சென்னை, செப். 26

சென்னை அசோக் நகர் மற்றும் சைதாப்பேட்டை அரசுப் பள்ளிகளில் கடந்த ஆகஸ்ட் 28ம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் மேடை பேச்சாளர் மகா விஷ்ணு என்பவர் சர்ச்சை ஏற்படுத்தும் வகையில் பேசினார். இதனைத்தொடர்ந்து மகாவிஷ்ணு கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டார். இதனிடையே மகா விஷ்ணுவின் ஜாமீன் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

முன்னதாகமகாவிஷ்ணு சர்ச்சை பேச்சு விவகாரத்தில் விசாரணையில் இறங்கிய பள்ளிக் கல்வித்துறை. அசோக் நகர் பள்ளியின் தலைமை ஆசிரியர் திருவள்ளூர் கோவில் பதாகை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார். இதைத்தொடர்ந்து, சென்னை சைதாப்பேட்டை அரசு மாதிரிப் பள்ளித் தலைமை ஆசிரியர் சண்முகசுந்தரம் பணியிட மாற்றம் செய்யப்பட்டிருந்தார். இதற்கு தலைமை ஆசிரியர்கள் தரப்பில் கடும் எதிர்ப்பு கிளம்பிய நிலையில், தற்போது அவர்கள் இருவரையும் மீண்டும் சென்னை மாவட்டத்துக்குள் இட மாற்றம் செய்து கல்வித் துறை உத்தரவிட்டுள்ளதாகதகவல்கள்வெளியாகி உள்ளன. அதன்படி தமிழரசி, சண்முகசுந்தரம் முறையேவிருகம்பாக்கம், அடையார் அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கு இட மாற்றம் செய்து இருப்பதாக கூறப்படுகிறது.

கடந்த 6ம் தேதி பணி மாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தநிலையில் இருவரும் புதிய பணி இடங்களில் சேராமல் இருந்ததாக கூறப்படுகிறது.

# கலெக்டர் பெயரில் போலி முகநூல் கணக்கு சைபர் கிரைம் போலீசார் விசாரணை




புதுக்கோட்டை, செப். 26

இன்றைய நவீன உலகில் இணையதள பயன்பாடு அதிகமாக உள்ளது. சமூகவலைத்தளங்களை பார்வையிடுதல், அதில் பதிவேற்றம் உள்ளிட்ட நடவடிக்கைகளில் பலரும் ஈடுபடுகின்றனர். இதற்கிடையில் வாட்ஸ் அப், முகநூல் உள்ளிட்ட சமூகவலைத்தளத்தை பயன்படுத்தி ஆன்லைன் மோசடியும் அரங்கேறி வருகிறது.

இந்த சூழலில் புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் மு.அருணா பெயரில் போலி முகநூல் கணக்கு தொடங்கப்பட்டிருந்தது. அந்த முகநூல் பக்கத்தில் இருந்த தகவல்கள் சந்தேகத்திற்கு இடமான வகையில் காணப்பட்டது. இதனால் பலரும் சந்தேகமடைந்துமாவட்ட நிர்வாகத்திற்கு தகவல்தெரிவித்தனர்.

இதை அறிந்த கலெக்டர் மு.அருணா இது பற்றி சைபர் கிரைம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். இதை தொடர்ந்து சைபர் கிரைம் போலீசார் தீவிர விசாரணை நடத்தினர்.

விசாரணையில் கலெக்டர் அருணாவின் பெயரில் போலி முகநூல் கணக்கை தொடங்கியது ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த கும்பல் என்பது தெரியவந்தது. இதை தொடர்ந்து அந்த போலி முகநூல் கணக்கை போலீசார் முடக்கினர்.

சமூக வலைதளங்களில் உலாவரும் இதுபோன்ற மோசடிகளை தடுக்க சைபர் கிரைம் போலீசாரும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

பொதுமக்கள் சிலரது பெயரில் போலி கணக்குகளை தொடங்கி அதன் மூலம் தற்போது பண மோசடி நடைபெறுவது அதிகரித்து வருகிறது. இதனால் போலி கணக்குகளை நம்பி பொதுமக்கள் ஏமாற வேண்டாம் என போலீசார் அறிவுறுத்தி வருகின்றனர்.

உங்கள் நண்பரின் சுய விவரத்தை பயன்படுத்தி போலி சமூக ஊடக கணக்கை தொடங்கி உங்களின் தனிப்பட்ட தகவலை பெறுவதற்கும் அல்லது அவசர நிலையை காரணம் காட்டி பணம் கேட்கவும் நட்பு கோரிக்கை விடுப்பார்கள். இதனால் பொதுமக்கள் உஷாராக இருந்து செயல்பட விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

மேலும் இதுபோன்ற மோசடியில் பாதிக்கப்பட்டவர்கள் சைபர் கிரைம் போலீசில் 1930 என்ற உதவிமைய தொலைபேசி எண்ணில் புகார் தெரிவிக்கலாம். மேலும் https://cybercrime.gov.inல் புகார் அளிக்கலாம் என போலீசார்தரப்பில்விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

# போலி என்.சி.சி. முகாம்: கிருஷ்ணகிரியில் மேலும் 2 புதிய வழக்குகள் பதிவு



சென்னை, செப்.26

கிருஷ்ணகிரி பாலியல் வழக்கில் தனியார் பள்ளி முதல்வர், தாளாருக்கு ஜாமீன் தரக் கூடாது என போலீஸ்தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரியில்போலி என்.சி.சி. முகாம் நடத்திய பள்ளி மாணவிகள் பலர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட வழக்கில், முக்கிய குற்றவாளி சிவராமன் தற்கொலை செய்துகொண்டார். இந்த வழக்கில் கைதான பள்ளியின் தாளாளர் சாம்சன்வெஸ்லி (வயது 52), தலைமை ஆசிரியர் சதீஷ்குமார் (40), ஆசிரியை மார்கரேட் ஜெனிபர் (35) உள்பட 6 பேர் சென்னை ஐகோர்ட்டில் ஜாமீன் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுக்கள்எல்லாம் நீதிபதி தனபால் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, போலீஸ் தரப்பில் கூடுதல் குற்றவியல் வக்கீல் முனியப்பராஜ் ஆஜராகி, "கிருஷ்ணகிரியில் மேலும் 2 பள்ளிகளில் இதுபோல போலி என்.சி.சி. முகாம் நடத்தப்பட்டுள்ளது. அதுகுறித்தும் 2 புதிய வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. புலன் விசாரணை தீவிரமாக நடந்து வருகிறது. பாலியல் பலாத்காரத்தில் பாதிக்கப்பட்ட சிறுமிகள் புகார் அளிக்கும்போது, அதை வெளியில் சொல்லக்கூடாது என்று மனுதாரர்கள் கூறியுள்ளனர். இது போக்சோ சட்டத்தின்படி தீவிர குற்றமாகும். அதனால், யாருக்கும் ஜாமீன் வழங்கக்கூடாது" என்று வாதிட்டார்.

இதையடுத்து, விசாரணையை வருகிற அக்டோபர் 1ந்தேதிக்கு தள்ளிவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

# ஒரே நாளில் அனைத்து மதுக்கடைகளையும் மூடுவது என்பது சாத்தியமில்லை: அமைச்சர் முத்துசாமி தகவல்



ஈரோடு, செப். 26

ஈரோட்டில் வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு ஆயத் தீர்வைத்துறை அமைச்சர் முத்துசாமி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

மதுவிலக்கு என்பதில் திமுகவுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால் ஒரே நாளில் அனைத்து மதுக்கடைகளையும் மூடுவது என்பது சாத்தியமில்லை. படிப்படியாக மதுக்கடைகள் மூடப்படும். ஏற்கனவே 500 டாஸ்மாக் மதுக்கடைகள் மூடப்பட்டன. குடிப்பழக்கத்தில் இருந்து விடுபடும் வகையில் கவுன்சிலிங் கொடுக்கப்படுகிறது.

பள்ளிக்கூடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. எனவே முன்னேற்பாடுகளை செய்துவிட்டு மதுக்கடைகள் மூடப்படும். தேசிய அளவில் மதுவிலக்கு கொள்கையை மத்திய அரசு கொண்டுவந்தால் தமிழகத்தில் அமல்படுத்த தயாராக இருக்கிறோம்.

பிரச்சினைக்குரிய டாஸ்மாக் மதுக்கடைகளை தேர்வு செய்து வருகிறோம். எனவே மதுக்கடைகளை மூடுவதற்கான பட்டியல் தயார் செய்து இருக்கிறோம். ஆனால் மூடப்படும் கடைகள் குறித்து முடிவு செய்யப்படவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# துபாய்க்கு செல்ல இருந்த விமானத்தில் புகை சென்னை விமான நிலையத்தில் பரபரப்பு

சென்னை, செப்.26

சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து துபாய் செல்வதற்காக நேற்று இரவு எமிரேட்ர்ஸ் விமானம் புறப்பட இருந்தது. அந்த விமானத்தில் மொத்தம் 280 பயணிகள் இருந்தனர்.

இந்நிலையில், விமானம் புறப்படுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு விமானத்தில் இருந்து திடீரென புகை வெளியேறியது. இதனால் விமான நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து உடனடியாக தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று தண்ணீரை பீய்ச்சி அடித்து புகையை கட்டுப்படுத்தினர். தொடர்ந்து பயணிகள் விமானத்திற்கு உள்ளேயே இருந்த நிலையில், கோளாறை சரிசெய்வதற்கான பணி மேற்கொள்ளப்பட்டது. புகை உடனடியாக கட்டுப்படுத்தப்பட்டதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக விமான நிலைய அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழகத்தில் 13 மாதங்களில் 12 ரவுடிகள் என்கவுண்ட்டரில் சுட்டுக்கொலை

சென்னை, செப்.26

தமிழகம் முழுவதும் கடந்த 13 மாதங்களில் என்கவுண்ட்டர்கள் மூலம் 12 ரவுடிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம்தாம்பரம் அருகே சோட்டா வினோத், ரமேஷ் ஆகிய 2 ரவுடிகளும், அக்டோபர் மாதம் சோழவரம் அருகே முத்து சரவணன், சண்டே சதீஷ் ஆகிய 2 ரவுடிகளும்,

நவம்பர் மாதம் ஸ்ரீபெரும்புதூர் அருகே ரவுடி குள்ள விஸ்வாவும், அதே மாதம் திருச்சி மாவட்டம் சமயபுரம் அருகே கொம்பன் ஜெகன், டிசம்பர் மாதம் காஞ்சீபுரம் அருகே ரகுவரன், கருப்பு பாட்ஷா ஆகிய 2 ரவுடிகளும் என்கவுண்ட்டர் மூலம் கொல்லப்பட்டனர்.

கடந்த ஜூலை மாதம் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே துரை என்ற ரவுடியும், மாதவரம் அருகே ரவுடி திருவேங்கடமும், கடந்த 18ந்தேதி அன்று வியாசர்பாடி ரெயில் நிலையம் அருகே தாதா காக்கா தோப்பு பாலாஜியும், தற்போது ரவுடி சீசிங் ராஜாவும் என்கவுண்ட்டரில் கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக சென்னை போலீஸ் கமிஷனராக அருண் பதவி ஏற்றபின்னர் 3 என்கவுண்ட்டர்கள் நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# மிரட்டல், மோசடி குற்றச்சாட்டுகள் வராகி மீது குண்டர் சட்டம் பாய்ந்தது



சென்னை, செப். 26

சென்னை விருகம்பாக்கத்தைச் சேர்ந்தவர்கிருஷ்ணகுமார்என்ற வராகி(வயது 50). ரூ.5 லட்சம் கேட்டு சார்பதிவாளரை மிரட்டியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் மயிலாப்பூர் போலீசார் வராகியை கடந்த 13ந் தேதி கைது செய்தனர்.

நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்ட அவரை, 2 நாட்கள் காவலில் எடுத்து போலீசார் விசாரித்தனர். இந்தநிலையில் அவர் மீது மிரட்டல், மோசடி குற்றச்சாட்டுகளை கூறி 40க்கும் மேற்பட்ட நபர்கள் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் கொடுத்தனர். சைதாப்பேட்டையைச் சேர்ந்த அருமைசெல்வம் என்பவர், நீதிமன்றத்தில் உதவியாளர் வேலை வாங்கி தருவதாக கூறி ரூ.2 லட்சம் மோசடி செய்து விட்டதாக வராகி மீது ஒரு புகார் மனுவை கொடுத்தார்.

அது தொடர்பாக ஐகோர்ட்டு போலீசார் 2வதாக வராகி மீது ஒரு வழக்கு பதிவு செய்தனர். எம்.கே.பி.நகரைச் சேர்ந்த பாரதி என்பவர் கொடுத்த புகாரில் சமையல் கியாஸ் ஏஜென்சி வாங்கி தருவதாக கூறி ரூ.5 லட்சத்தை வாங்கி விட்டு வராகி மோசடி செய்து விட்டார் என்று தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக எம்.கே.பி.நகர் போலீசார் வராகி மீது 3வது ஒரு வழக்கை பதிவு செய்தனர். இந்தநிலையில்வராகியை குண்டர் சட்டத்தின் கீழ் ஓராண்டு சிறையில் அடைக்க போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவு பிறப்பித்தார். மேற்கண்ட தகவல்கள் போலீசார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# உளுந்தூர்பேட்டை அருகே சாலையோர மரத்தில் சுற்றுலா வேன் மோதியதில் 6 பேர் பலி



உளுந்தூர்பேட்டை, செப். 26

ராணிப்பேட்டையை சேர்ந்தவர்கள் சுற்றுலா வேனில் திருச்செந்தூர் முருகன் கோவிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு ஊருக்கு திரும்பி கொண்டிருந்தனர். அப்போது உளுந்தூர்பேட்டை அருகே மேட்டத்தூர் எனும் இடத்தில் கனமழை காரணமாக டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த சுற்றுலா வேன் சாலையோர மரத்தில் அதிபயங்கரமாக மோதியது.

இந்த கோர விபத்தில் 2 பெண்கள் உள்பட 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 16 பேர் படுகாயமடைந்தனர். இந்த சம்பவம் பற்றி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் காயமடைந்தவர்களை மீட்டு விழுப்புரம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்ட போலீசார் பிரேத பரிசோதனைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சபரிமலை அய்யப்பன் கோவிலில் உண்டியல் பணம் திருட்டு: தென்காசி வாலிபர் கைது



சென்னை, செப். 26

சபரிமலை அய்யப்பன் கோவிலில் ஆவணி மாத பூஜையையொட்டி கடந்த மாதம் 16ந் தேதி நடை திறக்கப்பட்டு 21ந் தேதி வரை சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. 21ந் தேதி நடை சாத்தப்பட்ட பின்னர் கோவில் ஊழியர்கள் சன்னிதானத்தில் உள்ள உண்டியல்களை ஆய்வு செய்தனர்.

அப்போது கருவறை மண்டபத்திற்கு அருகில் இருந்த உண்டியல் உடைக்கப்பட்டு அதில் இருந்த காணிக்கை பணம் திருடப்பட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இது தொடர்பாக தேவஸ்தான ஊழியர்கள் சன்னிதானம் போலீசுக்குத் தகவல் தெரிவித்தனர். போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணையை தொடங்கினர்.

இதுதொடர்பாக தனிப்படை அமைக்கப்பட்டு ரகசியமாக விசாரணை நடத்தினர். சன்னிதானம் மற்றும் பம்பையில் வைக்கப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர். இது தவிர சபரிமலையில் துப்புரவு உள்ளிட்ட வேலைக்கு வரும் நபர்களிடமும் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த விசாரணையில் உண்டியல் பணத்தை திருடியது சபரிமலையில் துப்புரவு பணிக்கு வந்த தென்காசி மாவட்டம் கீழசுரண்டை பகுதியைச் சேர்ந்த சுரேஷ் (வயது32) என்பது தெரியவந்தது. இந்த விவரத்தை அறிந்த சுரேஷ் தப்பி ஓடினார். அவர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து அவரை வலைவீசி தேடினர்.

இதையடுத்து அவர் கீழசுரண்டையில் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து கீழசுரண்டைக்கு சென்ற போலீசார் வீட்டில் இருந்த சுரேசை மடக்கி பிடித்து கைது செய்தனர். பின்னர் அவரை பம்பைக்கு கொண்டு சென்று அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# சிவகங்கை மாவட்டத்தில் சிறுபான்மையினர் மேம்பாட்டு குழு கலந்தாய்வு கூட்டம்: மாவட்ட ஆட்சியர் கலந்து கொண்டார்

சிவகங்கை:செப் 26

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் சார்பில் கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது, இந்தக் கூட்டத்தில் சிறுபான்மையினர் மேம்பாட்டு கழக தலைவர் பெர்ணான்டஸ் ரத்தின ராஜா கலந்துகொண்டு நடைமுறையில் இருக்கும் திட்டங்கள் தொடர்பாக பேசினார்.



இந்த கூட்டத்தில் சிறுபான்மையினர் அமைப்புகளில் செயல்படும் பொறுப்பாளர்கள்கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை கூறினார்கள் அப்போது மாவட்டத்தில் உள்ள சிறு குறைபாடுகளையும் நடைமுறைபடுத்த வேண்டிய செயல் திட்டங்கள் குறித்தும் எடுத்துக் கூறினார்கள். திட்டங்களை சரி செய்வது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்,

இந்த கூட்டத்தில் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி அவர்களும் கலந்து கொண்டு திட்ட செயல்பாடுகள் குறித்து விளக்கி பேசினார். கூட்டத்தில் மாவட்ட அளவிலான சிறுபான்மையினர் நல அமைப்புகளின் பொறுப்பாளர்கள், கிறிஸ்தவ ஆயர்கள், பேராயர்கள் , இஸ்லாமியமதவழிசிறுபான்மை தலைவர்களும் கலந்து கொண்டு தங்களது தேவைகள் மற்றும் கருத்துகளை எடுத்துரைத்தார்கள் .

# காணை ஒன்றிய குழு பெருந்தலைவர் கலைச்செல்வி தலைமையில் மாம்பழப்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் இலவச மிதிவண்டி வழங்கும் நிகழ்வு

விழுப்புரம், செப். 26

மாம்பழப்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளியில் 20242025 கல்வியாண்டிற்கான 11ம் வகுப்பு பயிலும் மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசு வழங்கும் விலையில்லாமிதிவண்டி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.



விழுப்புரம் மாவட்டம் காணை ஒன்றியம் மாம்பழப்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளியில் பதினோராம்வகுப்புபயிலும் 174 மாணவ மாணவியர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க காணை ஒன்றிய குழு பெருந்தலைவர் கலைச்செல்வி தலைமையில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

இந் நிகழ்விவிற்கு தலைமைஏற்றுதலைமை ஆசிரியர் அருளரசன் வரவேற்புரை ஆற்றினார்.

இந் நிகழ்ச்சியில் காணைவட்டாரவளர்ச்சி அலுவலர், சுகாதாரத் துறை ஒருங்கிணைப்பாளர்,மாவட்ட கவுன்சிலர், சிவக்குமார் ஊராட்சி மன்ற தலைவர் பழனியம்மாள் பெற்றோர்ஆசிரியர்கழக தலைவர் குமார் பள்ளி மேலாண்மை குழு தலைவர் கவிதா ஒன்றிய கவுன்சிலர்கள் வழக்கறிஞர் பர்குணம், கருணாகரன்உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

காவல் உதவி ஆய்வாளர் அன்பழகன் பங்கேற்று மாணவர்களுக்கு போதைப் பொருள்களின் தீமை மற்றும் பேருந்து படிக்கட்டு பயணம் தவிர்க்க உரிய அறிவுரைகளை வழங்கினார்.

தமிழக அரசின் விலையில்லாமிதிவண்டி வழங்கும் நிகழ்விற்கான ஏற்பாட்டினை பள்ளி பொறுப்பாசிரியர் முருகானந்தம், பள்ளி மேலாண்மை குழு ஆசிரியர் பிரதிநிதி ராஜ்குமார், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஆசிரியர் ஏழுமலை மற்றும் உடற்கல்வித்துறை ஆசிரியர்கள் சிறப்பாக செய்தனர்.

இறுதியில் நன்றியுரை பள்ளி உதவி தலைமை ஆசிரியர் தினகரன் வழங்கினார். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் விழாவில் பங்கேற்று சிறப்பித்தனர்.

தமிழகத்தில் ஏழை மாணவர்களது நலன் காக்கும் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு மிதிவண்டிகளை பெற்றுக் கொண்ட மாணவர்கள், பெற்றோர்கள், இருபால் ஆசிரிய பெருமக்கள் தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

# விழுப்புரம் மாவட்டம், ஆற்காடு ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி

விழுப்புரம், செப். 26

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியம், ஆற்காடு ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும்வளர்ச்சித்திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.



புகைப்படக்கண்காட்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்று, முதல் பணியாக ஐந்து முக்கிய கோப்புகளில் கையொப்பமிட்டு, நடைமுறைப்படுத்திய திட்டங்களான அரிசு குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண நிதி உதவி ரூ.4,000/ வழங்கும் திட்டம், விடியல் பயணத் திட்டம், முதலமைச்சர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் தனியார் மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை பெறும் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து புகைப்படங்கள் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் இடம்பெற்றிருந்தன.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சரின் 1 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டம், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம், "மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வித் திட்டம்,முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம்", "மகளிர் உரிமைத் திட்டம், கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டம், மக்களுடன் முதல்வர் திட்டம், உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டம், இருளர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு தேவையான நலத் திட்டங்கள்,

இலங்கை தமிழர்களுக்கான நலத்திட்டங்கள், அமைப்புசாராதொழிலாளர்களுக்கான திட்டங்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரின் கனமழை மற்றும் வெள்ள மீட்பு பணி ஆய்வு புகைப்படங்கள் உள்ளிட்ட தமிழக அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றிய புகைப்படங்கள் இடம் பெற்றிருந்ததை ஆற்காடு ஊராட்சியினை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# பிரதமர் மோடியின் பருப்பு தமிழ்நாட்டில் வேகாது: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

சென்னை, செப். 26

சென்னையில் திமுக மூத்த முன்னோடிகள் 1,000 பேருக்கு பொற்கிழி வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் திமுகவின் வெற்றிக்கான காரணங்கள் மூன்று; அதில் முதல் காரணம் பிரதமர் மோடி தான்.



வெள்ளம், புயலுக்கு வராத மோடி தேர்தல் அறிவித்ததும் 8 முறை தமிழகத்திற்கு வந்தார்.

திமுக அரசின் சாதனைகள், திமுக முன்னோடிகளும் தேர்தல் வெற்றிக்கு காரணம்.

பிரதமர் மோடியின் பருப்பு வடநாட்டில் கூட வேகலாம்; தமிழ்நாட்டில் வேகாது. திமுகவின் மூத்த முன்னோடிகள் வழியில் அயராது உழைத்து, 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுகவை வெற்றி பெறச் செய்வோம். முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் மீண்டும் தி.மு.க ஆட்சியை அமைப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

# மனைவி ஆர்த்தி மீது நடிகர் ஜெயம் ரவி போலீசில் புகார்



நடிகர் ஜெயம் ரவி தனது மனைவி ஆர்த்தியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரியப்போவதாக அறிவித்து உள்ளார். கோர்ட்டில் விவாகரத்து வழக்கும் தொடர்ந்து இருக்கிறார்.

இதற்கு பதில் அளித்த ஜெயம் ரவியின் மனைவி, "இது எனது கவனத்துக்கு வராமலும் எனது ஒப்புதல் இல்லாமலும் ஜெயம் ரவி தன்னிச்சையாக எடுத்த முடிவு" என்று பேசியது பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், ஜெயம் ரவியும் பாடகி கெனிஷா பிரான்சிசும், நெருக்கமாக பழகுவதாகவும் இதனாலேயே மனைவியை பிரிய முடிவு செய்துள்ளார் என்றும் வலைத்தளத்தில் தகவல் பரவியது.

ஆனால் கெனிஷா பிரான்சிஸ் குறித்து பரவிய செய்திகளுக்கு ஜெயம் ரவி மறுப்பு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நடிகர் ஜெயம் ரவி அவரது மனைவி ஆர்த்தி மீது அடையாறு துணை ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார்.

அந்த புகாரில், சென்னை ஈ.சி.ஆர். சாலையில் உள்ள ஆர்த்தி வீட்டில் உள்ள தனது உடைமைகளை மீட்டுத்தர வேண்டும் ஜெயம் ரவி கோரிக்கை விடுத்துள்ளார்.

விவாகரத்து விவகாரம் சர்ச்சையான நிலையில் மனைவி ஆர்த்தி மீது நடிகர் ஜெயம் ரவி புகார் அளித்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இல்லத்தாற்கு உகந்த தடையில்லாப் பொதுக்காட்சி திரைப்படம் மெய்யழகன்




96 பட இயக்குநர் பிரேம் குமார் இயக்கத்தில் நடிகர் கார்த்தி நடித்துள்ளபடம் மெய்யழகன். 'கார்த்தியின் 27'வது படமான இந்த படத்தை சூர்யா ஜோதிகாவின் தயாரிப்பு நிறுவனமான 2டி என்டர்டெயின்மெண்ட் தயாரித்துள்ளது.

இப்படத்தில் அரவிந்த்சாமி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் ஸ்ரீதிவ்யா, ராஜ்கிரண் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இப்படம் செப்டம்பர் 27 ஆம் தேதி வெளியாக இருக்கிறது. 96 திரைப்படத்திற்கு இசையமைத்த கோவிந்த் வசந்தா இப்படத்திற்கும் இசையமைத்துள்ளார். படத்தின் இசை சில வாரங்களுக்கு முன் வெளியானது.

இப்படமும் 96 திரைப்படத்தைப்போல் ஓர் இரவில் நடக்கும் கதையாக கதைக்களம் அமைந்துள்ளது. திரைப்படத்தின் ப்ரோமோஷன் பணிகள் தீவிரமாக நடைப்பெற்று வருகிறது.

திரைப்படத்தின் டிரைலர் அண்மையில் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இத்திரைப்படம் ஒரு ஃபீல் குட் திரைப்படமாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

மெய்யழகன் திரைப்படத்திற்கு தணிக்கை குழு யூ சான்றிதழ் அளித்துள்ளது. திரைப்படத்தின் நேர அளவு 2 மணி நேரம் 57 நிமிடங்களாகும்.

# ஜீவா நடித்த பிளாக் படத்தின் டிரைலர் வெளியீடு




மாநகரம், மான்ஸ்டர், டானாக்காரன், இறுகப்பற்று போன்ற வெற்றி படங்களை தயாரித்த பொட்டன்சியல் ஸ்டூடியோஸ் அடுத்ததாக ஜீவா நடித்துள்ள பிளாக் திரைப் படத்தை தயாரித்துள்ளனர்.

இப்படம் ஒரே நாள் இரவில் நடக்கும் சம்பவம். இரண்டு கதாபாத்திரங்கள் மட்டுமே பிரதானம்.

சென்னையில் எடுக்கப்பட்ட இப்படத்தின் படபிடிப்பு வேலைகள் முடிவடைந்து படம் வெளியீட்டு வேலைகள் நடைபெற்று வருகிறது. திரைப்படம் வரும் அக்டோபர் மாதம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படத்தை பாலசுப்பிரமணி கேஜி இயக்கியுள்ளார். இதில் நாயகனாக ஜீவா நடிக்கிறார். இவரது ஜோடியாக பிரியா பவானி சங்கர் நடிக்கிறார். படத்திற்கு சாம் சி.எஸ் இசையமைத்துள்ளார்.

திரைப்படத்தின் டிரைலர் குறித்து தற்பொழுது படக்குழு அப்டேட் வெளியிட்டுள்ளது. படத்தின் டிரைலர் நாளை மாலை 5 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. திரைப்படம் வரும் அக்டோபர் மாதம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# எங்களால் எந்த அணியையும் வீழ்த்த முடியும் ஹர்மன்பிரீத்




9வது பெண்கள் 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் (அக்டோபர்) 3ந்தேதி முதல் 20ந்தேதி வரை துபாய் மற்றும் சார்ஜாவில் நடக்கிறது. இதில் பங்கேற்கும் 10 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் இடம் பெற்றுள்ள இந்தியா தனது முதல் ஆட்டத்தில் நியூசிலாந்துடன் அக்.4ந்தேதி மோதுகிறது. தொடர்ந்து 6ந்தேதி பாகிஸ்தானையும், 9ந்தேதி இலங்கையையும், 13ந்தேதி நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியாவையும் சந்திக்கிறது.

இந்த போட்டிக்கு புறப்படுவதற்கு முன்பாக இந்திய பெண்கள் அணியின் கேப்டன் 35 வயதான ஹர்மன்பிரீத் கவுர் நேற்று மும்பையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

கோப்பையை தட்டித்தூக்குவதே எங்களது பிரதான இலக்கு. ஒரு அணியாக அதற்காகத் தான் முயற்சிக்கிறோம். உலகில் எந்த இடத்தில் விளையாடுகிறோம் என்பது முக்கியமல்ல. எப்போதும் அணிக்கு ஆதரவாக இருக்கும் ரசிகர்கள் மற்றும் நாட்டுக்காக கோப்பையை வென்று கொண்டுவர வேண்டும் என்பதே ஒரே எதிர்பார்ப்பு. அதை இந்த தடவை செய்ய முடியும் என்று நம்புகிறேன்.

2020ம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடந்த 20 ஓவர் உலகக் கோப்பை போட்டியில் இறுதிப்போட்டி வரை முன்னேறினோம். கடந்த ஆண்டு தென்ஆப்பிரிக்காவில் நடந்த போட்டியில் இறுதி சுற்றை நெருங்கி வந்து தோல்வி கண்டோம். இந்திய அணிக்கு என்று ஒரு பாரம்பரியம் உள்ளது. அது முக்கியமான தருணங்களில் ஜொலித்து கோப்பையை வெல்வது வரை எடுத்து செல்லும்.

அணி குறித்து பேசவேண்டும் என்றால், சில வீராங்கனைகள் நீண்ட காலமாக விளையாடி வருகிறார்கள். அணியில் தங்களுக்குரிய பங்களிப்பு என்ன என்பது அவர்களுக்கு தெரியும். நமது அணி மீது மிகுந்த நம்பிக்கை உள்ளது. உலகக் கோப்பைக்கு செல்லும் மிகச்சிறந்த இந்திய அணி இது தான் என்று சொல்ல முடியும். எல்லா வகையிலும் போட்டிக்கு தயாராகி உள்ளோம்.

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற அணிகள் கடும் சவாலாக இருக்கும். எங்களால் எந்த அணியையும் வீழ்த்த முடியும். இது ஆஸ்திரேலிய அணிக்கும் நன்கு தெரியும். தங்களை ஒரு அணியால் வீழ்த்த முடியும் என்றால் அது இந்தியா தான் என்பதை ஆஸ்திரேலியர்கள் அறிவார்கள்.

என்னை பொறுத்தவரை பல உலகக் கோப்பை போட்டிகளில் பங்கேற்ற அனுபவம் உள்ளது. 19 வயதில் எப்படி ஆடினேனோ அதே உத்வேகத்துடன் இப்போதும் விளையாட விரும்புகிறேன். துபாய், சார்ஜாவில் ஆடும் போது அதிக எண்ணிக்கையில் ரசிகர்கள் வருகை தந்து உற்சாகப்படுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

இவ்வாறு ஹர்மன்பிரீத் கவுர் கூறினார்.

# ஹாரி புரூக் அபார சதம்: 3வது ஒருநாள் போட்டியில் டிஎல்எஸ் முறையில் இங்கிலாந்து வெற்றி




இங்கிலாந்து, ஆஸ்திரேலியா இடையிலான 3வது ஒருநாள் போட்டி செஸ்டர் லீ ஸ்டிரீட்டில் நேற்று நடைபெற்றது. டாஸ் வென்ற இங்கிலாந்து கேப்டன் ஹாரி புரூக் பந்துவீச்சு தேர்வு செய்தார்.

அதன்படி, முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 304 ரன்கள் குவித்தது. அலெக்ஸ் கேரி 77 ரன்னும், ஸ்டீவ் சுமித் 60 ரன்னும், ஆரோன் ஹார்டி 44 ரன்னும், கேமரூன் கிரீன் 42 ரன்னும் எடுத்தனர்.

இங்கிலாந்து சார்பில் ஜோப்ரா ஆர்ச்சர் 2 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து, 305 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி இங்கிலாந்து பேட்டிங் செய்தது. தொடக்க ஆட்டக்காரர் பிலிப்ஸ் சால்ட் டக் அவுட்டானார். பென் டக்கெட் 8 ரன்னில் வெளியேறினார்.

3வது விக்கெட்டுக்கு இணைந்த வில் ஜாக்ஸ், ஹாரி புரூக் ஜோடி பொறுப்புடன் ஆடி 156 ரன்களை சேர்த்தது. வில் ஜாக்ஸ் அரை சதம் கடந்து 84 ரன்னில் வெளியேறினார். கேப்டன் ஹாரி புருக் சிறப்பாக ஆடி சதம் கடந்தார்.

இறுதியில், இங்கிலாந்து அணி 37.4 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 254 ரன்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது. தொடர்ந்து மழை பெய்ததால் டிஎல்எஸ் முறை பின்பற்றப்பட்டது. அதன்படி, இங்கிலாந்து அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதன்மூல ஒருநாள் தொடரில் இங்கிலாந்து 12 என பின்தங்கி உள்ளது. இரு அணிகளுக்கு இடையிலான 4வது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் நடைபெற உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.